Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, ஏப்ரல் 25, 2025 | இதழ் 12

# எல்லையில் போர் பதட்டம்: ஏவுகணை சோதனைக்கு பாகிஸ்தான் உத்தரவு




சென்னை, 25 ஏப்ரல் 2025: ஏவுகணை சோதனை நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டு இருப்பதாக வெளிவந்துள்ள தகவலை தொடர்ந்து எல்லையில் போர் பதட்டம் எழுந்துள்ளது.

பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும், 20 பேர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் முப்படைகளையும் தயார் நிலையில் இருக்க இந்தியா உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் கராச்சி கடலோரப் பகுதியில் இன்றும் நாளையும் தரையில் இருந்து இலக்கை தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனை நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டிருப்பதாக ஏஎன்ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையை இந்தியா உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பாகிஸ்தானின் போர் விமானங்களை எல்லையில் நிலைநிறுத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக வெளியான தகவலை தொடர்ந்து போர் பதட்டம் எழுந்துள்ளது.

# பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு மவுன அஞ்சலி. காஷ்மீரில் தாக்குதல் பயங்கரவாதிகள் யாரும் தப்ப முடியாது: மோடி உறுதி

சென்னை, 25 ஏப்ரல் 2025: காஷ்மீரில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் யாரும் தப்ப முடியாது என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இன்று காலை பீகார் மாநிலம் மது பானியில் நடந்த தேசிய பஞ்சாயத்துராஜ் தின நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பாக செயல்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை அங்கீகரிக்கும் வகையில் ஊக்கத் தொகை மற்றும் தேசிய பஞ்சாயத்து விருதுகளையும் அவர் வழங்கினார்.

அதை தொடர்ந்து ரூ.13,500 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பீகார் முதல்வர் நிதிஷ்குமார் உள்ளிட்ட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

மேலும் பீகாரில் அம்ரித் பாரத், நமோ பாரத் விரைவு ரெயில் சேவைகளையும் பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 54 ஆயிரம் பயனாளிகளுக்கு அவர் வீடுகளின் சாவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் காஷ்மீர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி, தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் 1 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.

யாரும் தப்ப முடியாது

பீகார் மாநிலம் மதுபானி நகரில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகையில்,

காஷ்மீரில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். காயம் அடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்காக காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் வேட்டையாடப்படுவார்கள். தாக்குதல் நடத்தியவர்கள் யாரும் தப்ப முடியாது.

தாக்குதல் நடத்தியவர்கள், சதி செய்தவர்களுக்கு கற்பனை செய்ய முடியாத அளவுக்கு தண்டனை வழங்கப்படும்.

இந்தியாவின் தன்னம்பிக்கையை யாராலும் அசைக்க முடியாது. பயங்கரவாதிகளை இருந்த இடம் தெரியாமல் ஒழிப் போம். இவ்வாறு அவர் பேசினார்.

# உள்நாட்டு நீர்வழிப் பாதைகளில் இந்தியாவின் சாதனை அளவான சரக்குப் போக்குவரத்து



சென்னை, 25 ஏப்ரல் 2025: தேசிய நீர்வழிப் பாதைகளில் கடந்த 10 ஆண்டுகளில் சரக்குப் போக்குவரத்து பெருமளவு அதிகரித்துள்ளது. நிதியாண்டு 2013-14-ல் தேசிய நீர்வழிப் பாதைகளில் 18.10 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்த சரக்குப் போக்குவரத்து நிதியாண்டு 2024-25ல் 145.5 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்தது.

நிதியாண்டு 2024-ஐ விட நிதியாண்டு 2025-ல் சரக்குப் போக்குவரத்து 9.34%-ஐ பதிவு செய்தது. மொத்த சரக்குப் போக்குவரத்தில் நிலக்கரி, இரும்பு தாது, மணல், சாம்பல் ஆகியவை 68%-ஆக இருந்தது. 2023-24-ல் பயணிகள் போக்குவரத்தும் 1.61 கோடி என்ற னுண்ணிக்கையை எட்டியது.

மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் பாதைகள் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய உள்நாட்டு நீர்வழிப் பாதைகள் ஆணையம் நீர்வழிப் பாதைகளின் எண்ணிக்கையை 5-லிருந்து 111-ஆக விரிவுப்படுத்தியது. 2014 முதல் நீர்வழிப் பாதைகள் உள்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு ரூ.6,434 கோடி முதலீடு செய்துள்ளது.

2014-15 ல் 2716 கிலோமீட்டராக இருந்த தேசிய நீர்வழிப்பாதைகளின் தூரம் 2023-24 ல் 4894 கிலோமீட்டராக அதிகரித்துள்ளது.

உள்நாட்டு நீர்வழிப் பாதைகள் மூலமான சரக்குப் போக்குவரத்திற்கு மத்திய அரசு இலக்குகளை நிர்ணயித்துள்ளது. இந்தியக் கடல்சார் தொலைநோக்குப் பார்வை 2030-ன் படி சரக்குப் போக்குவரத்தை 200 மில்லியன் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே போல் கடல்சார் அமிர்த கால தொலை நோக்குப் பார்வை 2047-ன் படி சரக்குப் போக்குவரத்தை 500 மில்லியன் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்த்தவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு நீர்வழிப் பாதைகளை மேம்படுத்துவதில் இந்தியாவின் ஒருங்கிணைந்த முயற்சிகள் குறிப்பிடத்தக்க பயன்களை தந்துள்ளன. சரக்குப் போக்குவரத்தில் சாதனை படைக்கப்பட்டுள்ளதோடு உள்கட்டமைப்பும் விஸ்தரிவாக்கப்பட்டுள்ளது.

உத்திசார் முதலீடுகள், கொள்கை முன் முயற்சிகள், டிஜிட்டல் ரீதியான புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவை இணைந்து உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து துறையை மேலும் விரிவுப்படுத்தியுள்ளன.

இது நீடித்த போக்குவரத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்துள்ளது.

# கும்பகோணத்தில் கருணாநிதி பெயரில் பல்கலைக்கழகம்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, 25 ஏப்ரல் 2025: கும்பகோணத்தில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று சட்டசபையில் இன்று முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்தார்.

கலைஞரின் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை தமிழ்நாடு சட்டப் பேரவையில் வெளியிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

நம்முடைய உறுப்பினர்கள் கு.செல்வப் பெருந்தகை, ஜி.கே.மணி, சிந்தனைச் செல்வன், வீ.பி. நாகைமாலி, ராமச் சந்திரன், சதன் திருமலைக்குமார், எம்.எச். ஜவாஹிருல்லா, ரா.ஈஸ்வரன், தி.வேல் முருகன் பின்னர், அவர்களைத் தொடர்ந்து நம்முடைய அவை முன்னவர், அதேபோல், பேரவைத் தலைவர் ஆகியோர் விதி எண் 55-ஐப் பயன்படுத்தி கருணாநிதி பெயரால் ஓர் பல்கலைக் கழகத்தை உருவாக்க வேண்டுமென்று யூங்களுடைய கருத்துக்களை உணர்வுபூர்வமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பள்ளிகளாக இருந்தாலும் கல்லூரிகளாக இருந்தாலும், அவையெல்லாம் இன்றைக்கு வளர்ந்து, மேலோங்கி மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக, ஏன், உலக அளவிலே இன்றைக்குப் பாராட்டப்படக் கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கின்றன. நாட்டிலேயே முதல் இடத்திற்கு வந்திருக்கக்கூடிய அந்தக் கல்வி நிலையங்கள் எல்லாம் உருவாவதற்குக் காரணமாகப் பல்வேறு தலைவர்கள் இருந்தாலும், அவர்களிலே முக்கியமான தலைவர்களில் ஒருவராக கலைஞர் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அப்படி கல்வியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டிருக்கக்கூடிய, பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கக் கூடிய கருணாநிதிக்கு -- எல்லோரும் இங்கே குறிப்பிட்டிருப்பதைப்போல, பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் பல்கலைக்கழகமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய கருணாநிதிக்கு -- விரைவில் அவர் பிறந்த ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கும்பகோணத்திலே உறுப்பினர் ஜி.கே. மணி குறிப்பிட்டதைப் போன்று, எந்தவிதத் தயக்கமுமின்றி நான் அறிவிக்கிறேன். கருணாநிதி பெயரில் கும்பகோணத்தில் விரைவில் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்படும் என்ற உறுதியான செய்தியை மீண்டும் சொல்கிறேன்; எந்தவித தயக்கமுமின்றி இதைச் சொல்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

முதல்வரின் இந்த அறிவிப்புக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் நன்றி கூறி பேசினார்.

முன்னதாக சட்டமன்ற முன்வரிசை கட்சி தலைவர்களான கு.செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்), ஜி.கே.மணி (பா.ம.க.), சிந்தனைச் செல்வன் (வி.சி.க.), நாகைமாலி (மார்க்சிஸ்ட்), டி.ராமச்சந்திரன், சதன் திருமலைக்குமார் (ம.தி.மு.க.), எம்.எச். ஜவாஹிருல்லா (மனிதநேய மக்கள் கட்சி), ரா.ஈஸ்வரன், (கொங்கு நாடு மக்கள் கட்சி), தி.வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமை கட்சி) ஆகியோர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பன்முகத் திறமை பற்றியும், அவர் தமிழ்ச் சமுகத்துக்கு செய்த சாதனைத் திட்டங்கள், சமூகநீதி சட்ட திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் ஆற்றிய அரும்பணிகள் குறித்துப் பேசி பல பல்கலைக்கழகங்களை உருவாக்கிய கருணாநிதி பெயரில் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி சபை விதி 55ன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து முன்மொழிந்து பேசினார்கள்.

அவை முன்னவர் துரைமுருகன் பேசுகையில், தமிழ் மக்களுக்கு தொண்டு செய்த பெரியார், காமராசர், அண்ணா போன்ற தலைவர்களுடைய பெயரை பல்கலைக் கழகங்களுக்கு சூட்டியவர் கருணாநிதி என்றார். சென்னை பல்கலைக்கழகம் எம்.ஜி.ஆருக்கு டாக்டர் பட்டம் வழங்க முன்வந்த போது அதன் சிண்டிகேட் உறுப்பினராக நான் (துரைமுருகன்) இருந்தேன். எம்.ஜி.ஆருக்கு டாக்டர் பட்டம் வழங்க பல்கலைக்கழக சிண்டிகேட்டில் உறுப்பினராக இருந்த என்னை 'டாக்டர் பட்டத்துக்கு எம்.ஜி.ஆர். தகுதியானவர்' என்று கூறி அதை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றச் சொன்னவர் கருணாநிதி. அவருடைய பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கக் கோரும் தீர்மானத்தை சட்டமன்ற கட்சித் தலைவர்கள் கொண்டு வந்த இந்த பேரவைக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் எதிர்க்கட்சி தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று துரைமுருகன் பேசினார்.

# 4 நாள் சுற்றுப்பயணத்தை முடித்து அமெரிக்கா புறப்பட்டார் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ்



சென்னை, 25 ஏப்ரல் 2025: 4 நாட்கள் பயணமாக அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் குடும்பத்துடன் இந்தியா வந்தார். அவரது மனைவியும் இந்திய வம்சாவளி பெண்ணுமான உஷா, குழந்தைகள் எவான், விவேக், மிராபெல் ஆகியோரும் இந்தியா வந்தனர்.

இந்த சுற்றுப் பயணத்தின்போது டெல்லியில் உள்ள சுவாமி நாராயணன் அக்ஷர்தாம் கோவிலுக்கு ஜே.டி.வான்ஸ் குடும்பத்துடன் சென்று சாமி தரிசனம் செய்தார்.

தொடர்ந்து ஜே.டி. வான்ஸ், பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சந்தித்தார். பிரதமர் மோடியுடனான சந்திப்பை அடுத்து ஜே.டி.வான்ஸ் குடும்பத்துடன் ஜெய்ப்பூர் சென்று, அங்கு நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

பின்னர், தாஜ்மகாலுக்கு சென்ற அவர், குடும்பத்துடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

இதற்காக நேற்று ஜெய்ப்பூரில் இருந்து ஆக்ரா விமான நிலையத்திற்கு வந்து இறங்கிய அவரை உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். விமான நிலையத்தில் இருந்து தாஜ்மகால் வரை துணை அதிபர் வான்ஸ் குடும்பத்தினர் காரில் பயணம் செய்தனர். தாஜ்மகாலை குடும்பத்துடன் வான்ஸ் கண்டு மகிழ்ந்தார்.

பின்னர் அவர் அங்குள்ள பார்வையாளர் புத்தகத்தில், தாஜ்மகால் அற்புதமானது. உண்மையான அன்புக்கான சான்று, மனித புத்திகூர்மை மற்றும் இந்தியா என்ற மகத்தான நாட்டிற்கான மரியாதை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், தனது 4 நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு இன்று ஜெய்ப்பூர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சிறப்பு விமானத்தில் வாஷிங்டனுக்கு புறப்பட்டு சென்றார்.

# சைவ சித்தாந்த மாநாடு 2025 மே 3 முதல் 5 வரை எஸ்ஆர்எம்ஐஎஸ்டி ல் நடைபெறும். 300க்கும் மேற்பட்ட சைவ மத அறிஞர்கள் பங்கேற்கின்றனர்

சென்னை 25, ஏப்ரல் 2025: தர்மபுரம் ஆதீனம் மற்றும் எஸ்.ஆர்.எம் தமிழ் பேராயம் நடத்தும் 6வது சர்வதேச சைவ சித்தாந்த மாநாடு 2025 மே 3 முதல் 5 வரை நடைபெற உள்ளது.

மத்திய சுகாதார அமைச்சர் மாண்புமிகு ஜே.பி. நட்டா மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி ஆகியோரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

இந்த நிறைவு விழாவில் மகாராஷ்டிர ஆளுநர் மாண்புமிகு சி.பி. ராதாகிருஷ்ணன் மற்றும் பிற பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

உலகின் 16 நாடுகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட சைவ மத அறிஞர்கள் இந்த மாநாட்டில் பங்கேற் பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத அறிஞர்கள் பங்கேற் பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தான் அரசின் எக்ஸ் தள பக்கம் இந்தியாவில் முடக்கம்

சென்னை 25, ஏப்ரல் 2025: பாகிஸ்தான் அரசின் எக்ஸ் சமூக வலைதள பக்கம் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் தாக்குதலை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்த நிலையில், பாகிஸ்தான் அரசின் எக்ஸ் சமூக வலைதள பக்கம் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வேண்டுகோளை ஏற்று எக்ஸ் தள நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது என பாதுகாப்பு துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து பாதுகாப்பு துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலை தொடர்ந்து பல்வேறு கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான சர்வதேச எல்லைப்பகுதி, எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அமைந்துள்ள இடங்களில் கண்காணிப்பு முழு வீச்சில் மேற்கொள்ளப்படுகிறது.

கராச்சி கடலோரப் பகுதியில் இருந்து ஏவுகணை சோதனை நடத்த பாகிஸ்தான் உத்தரவிட்டுள்ளது. இன்றும், நாளையும் நடைபெறும் சோதனை நடவடிக்கைகளை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# 2018ம் ஆண்டு கீழ்பாக்கம் காவல் நிலைய வழக்கில் தந்தை மற்றும் மகனுக்கு தலா 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.25,000/- அபராதம் விதித்தும் நீதிமன்றம் தீர்ப்பு.

சென்னை 25, ஏப்ரல் 2025: கடந்த 2018ம் வருடம், சென்னை, கீழ்பாக்கம், சாஸ்திரி நகர் பகுதியில் வசித்து வரும் வெங்கடேஷ், வ/33, த/பெ.பாப்பாஸ் என்பவரின் வீட்டில் உள்ள குளிர்சாதனப் பெட்டியை பக்கத்து வீட்டில் வசித்து வரும் எதிரி ராஜ்கமல் என்பவரின் குழந்தை சேதப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக கடந்த 08.07.2018 அன்று இரு தரப்பினருக்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டு, தகராறு முற்றிய நிலையில், செல்வராஜ் மற்றும் ராஜ்கமல் ஆகிய இருவரும் சேர்ந்து மேற்படி வெங்கடேசை தகாத வார்த்தைகள் பேசி, கத்தியால் தாக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட வெங்கடேஷ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து கொடுத்த புகாரின்பேரில், ஜி-3 கீழ்பாக்கம் காவல் நிலையத்தில் கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, போலீசார் எதிரி 1.செல்வராஜ், வ/55 (2018), த/பெ. முனுசாமி, 1வது தெரு, சாஸ்திரி நகர், கீழ்பாக்கம், சென்னை அவரது மகன் 2.ராஜ்கமல், வ/32 (2018), த/பெ. செல்வராஜ், 1வது தெரு, சாஸ்திரி நகர், கீழ்பாக்கம், சென்னை ஆகிய 2 நபர்களை கைது செய்து, 2018 வருடம் கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர். ஜி-3 கீழ்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை, 16வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு விசாரணை நடைபெற்று, நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து கடந்த 21.04.2025 அன்று இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகள் 1.செல்வராஜ் மற்றும் 2.ராஜ்கமல் ஆகிய இருவர் மீதும் குற்றம் நிரூபிக்கப் பட்டதால், குற்றவாளிகள் இருவருக்கும் தலா 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.25,000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 1 வருடம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார்.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி சாட்சிகளை ஆஜர் படுத்தி, தொடர்ச்சியான நடவடிக்கை களினால் நீதிமன்றத்தில் குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த ஜி-3 கீழ்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# மயிலாப்பூர் பகுதியில் வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களை திருடிய நபர் கைது. 2 கிராம் தங்க நகை மற்றும் 233 கிராம் வெள்ளிப் பொருட்கள் மீட்கப்பட்டது.

சென்னை 25, ஏப்ரல் 2025: சென்னை, மயிலாப்பூரில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் ஜமுனாராவ் சாஹப், பெ/வ-79, க/பெ. ராவ்சாஹப் என்பவர் தனது கணவருடன் வசித்து வருகிறார். இவர் கடந்த 08.04.2025 அன்று தனது தங்கை வீட்டிற்கு செல்வதற்காக, மேற்படி வீட்டை பூட்டிவிட்டு, மீண்டும் கடந்த 11.04.2025 அன்று காலை வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, பீரோவில் வைத்திருந்த சுமார் 2 1/2 சவரன் தங்க நகைகள் மற்றும் வெள்ளிப்பொருட்கள்



திருடு போனது தெரிய வந்தது. இது குறித்து ஜமுனாராவ் சாஹப், இ-1 மயிலாப்பூர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற் கொண்டனர்.

இ-1 மயிலாப்பூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட சுரேஷ், வ/49, த/பெ.முத்து, 9வது தெரு, காமராஜர் காலனி, கோடம்பாக்கம், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மேற்படி வீட்டில் திருடப்பட்ட 2 கிராம் எடையுள்ள தங்க நகை மற்றும் 233 கிராம் எடையுள்ள வெள்ளிப்பொருட்கள் மீட்கப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சுரேஷ் மீது ஏற்கனவே திருட்டு, வழிப்பறி, கஞ்சா உட்பட 24 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

மேலும் மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட மற்றொரு தலைமறைவு குற்றவாளியை பிடிக்க தனிப்படை போலீசார் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட எதிரி சுரேஷ், விசாரணைக்குப் பின்னர் 23.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# இந்தியாவில் வணிக மற்றும் நுகர்வோர் பிரிவுகளில் அடுத்த தலைமுறை ஏஐ பிசிகளை ஹெச்பி அறிமுகப்படுத்தியுள்ளது

புது தில்லி 25, ஏப்ரல் 2025: இன்று ஹெச்பி இந்தியாவில் அதன் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் விளீவான அடுத்த தலைமுறை ஏஐ பிசி வரிசையை வெளியிட்டது. புதிய ஹெச்பி எலைட் புக், ஹெச்பி புரோபுக் மற்றும் ஹெச்பி ஆம்னி புக் தொடர்கள் பெரிய நிறுவனங்கள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் சில்லறை நுகர்வோர்



முழுவதும் பயனர்களின் கணினி அனுபவத்தை மேம் படுத்த வடிவமைக்கப் பட்டுள்ளன. இண்டல் கோர் அல்ட்ரா 200 வி தொடர், ஏஎம்டி ரைசான் ஏஐ 300 தொடர் மற்றும் க்வல்கம் ஸ்நேப் டிராகன் எக்ஸ், எக்ஸ் எலைட், எக்ஸ் ப்ளஸ் உள்ளிட்ட சமீபத்திய செயலிகளால் இயக்கப்படுகின்றன 6, 7 இந்த போர்ட்ஃபோலியோ பிரத்தியேக நியூரல் பிராசஸிங் யூனிட்டுகளுடன் (என்பியு) பொருத்தப்பட்டுள்ளது. 8 வினாடிக்கு 40 முதல் 55 டிரில்லியன் செயல்பாடுகளை (டாப்ஸ்) செய்யும் திறன் கொண்டது. கோபைலட்+ பிசி-களாக, அவை ஏஐ-ஐ முக்கிய கணினி அனுபவத்தில் கொண்டு வருகின்றன, சக்திவாய்ந்த மற்றும் உள்ளுணர்வு வழிகளில் உற்பத்தித்திறன், படைப்பாற்றல் மற்றும் கூட்டுப் பணியாற்று தலை மேம்படுத்து கின்றன.

ஹெச்பி இந்தியாவின் மூத்த துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் இப்சிதா தாஸ்குப்தா அவர்கள், "இந்தியா அதன் டிஜிட்டல் பயணத்தில் ஒரு சக்திவாய்ந்த திருப்பத்தில் நிற்கிறது. இங்கு ஏஐ, கிளவுட் மற்றும் இணைப்பு ஆகியவை ஒன்றிணைந்து நாம் எவ்வாறு வாழ்கிறோம், கற்றுக்கொள்கிறோம் மற்றும் வேலை செய்கிறோம் என்பதை மறுவடிவமைக்கின்றன. உலகின் மிகப்பெரிய டெவலப்பர் தளங்களில் ஒன்றான இந்தியா மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பயனர் சுற்றுச் சூழல் அமைப்புடன், ஏஐ புரட்சியை வழிநடத்த இந்தியா தயாராக உள்ளது. ஹெச்பி-யில், அர்த்தமுள்ள புதுமைகளை வழங்குவதற்கும், உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும், நிதி சேவைகள் மற்றும் சில்லறை விற்பனை முதல் சுகாதாரம் மற்றும் கல்வி வரையிலான துறைகளில் பொருளாதார வாய்ப்பை செயல்படுத்துவதற்கும், வேலையின் னுதிர் காலத்தை மறுவரையறை செய்வதற்கும் இது ஒரு முக்கிய தருணமாக நாங்கள் பார்க்கிறோம்" என்று கூறினார்.

புதிதாக மறுவடிவமைப்பு செய்யப்பட்ட ஹெச்பி எலைட் புக் மற்றும் ஹெச்பி புரோபுக் தொடர்கள் நிறுவன பயனர்களை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்ளும், குழுக்களை தொலை தூரத்தில் நிர்வகிக்கும் மற்றும் தடையற்ற ஒத்துழைப்பு கருவிகளைப் பயன்படுத்தி உயர்மட்ட செயல் திறன் தேவைப்படும் நவீன வணிகத் தலைவர்களுக்காக இந்த மடிக்கணினிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அடுத்த தலைமுறை ஏஐ திறன்களால் இயக்கப்படும் இந்த வரிசை, வீடியோ அழைப்புகளின் போது நிகழ்நேர இரைச்சல் ரத்து மற்றும் தானியங்கி-கட்டமைப்பிலிருந்து தனிப்பட்ட பணி பாணிகளைத் தனிப்பயனாக்கும் தகவமைப்பு செயல்திறன் வரை அறிவார்ந்த செயல்திறன் ஊேம்பாடுகளை வழங்குகிறது. நீண்ட பேட்டரி ஆயுள், தடையற்ற பல்பணி மற்றும் நிறுவன-தர பாதுகாப்புடன், இந்த வரிசை நிபுணர்கள் எங்கிருந்தும் உற்பத்தி மற்றும் பாதுகாப்பாக இருக்க உதவுகிறது. இந்த வரிசையில் ஹெச்பி எலைட் புக் 8 (ஜி1ஐ, ஜி1ஏ), ஹெச்பி எலைட் புக் 6 (ஜி1க்யு ஜி1ஏ) மற்றும் ஹெச்பி புரோபுக் 4 ஜி1க்யு ஆகியவை அடங்கும்.

படைப்பாளிகள், ஃப்ரீலான்ஸர்கள் மற்றும் அன்றாட பயனர்களுக்கு, ஹெச்பி ஆம்னிபுக் தொடர், தனிப்பட்ட உற்பத்தித் திறன் மற்றும் படைப் பாற்றலுக்கு ஏஐ இன் சக்தியைக் கொண்டு வருகிறது. இந்த சாதனங்கள் உள்ளடக்க உருவாக்கம், கிராஃபிக் வடிவமைப்பு, பல்பணி, ஸ்ட்ரீமிங் அல்லது தொலைதூர கற்றல் என மாறும் வாழ்க்கை முறைகளுக்கு தடையின்றி மாற்றியமைக்க வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேம்பட்ட ஏஐ திறன்கள் வீடியோ அழைப்பு அனுபவத்தை மேம்படுத்துகின்றன, ஒத்துழைப்பை ஒழுங்குபடுத்துகின்றன மற்றும் செயல்திறனை மேம்படுத்துகின்றன. ஹெச்பி ஆம்னிபுக் அல்ட்ரா 14", ஹெச்பி ஆம்னிபுக் 5 16", ஹெச்பி ஆம்னிபுக் 7 ஏரோ 13", ஹெச்பி ஆம்னிபுக் எக்ஸ் 14" உள்ளிட்ட வரிசையானது, பின்னணியில் அமைதியாக செயல்படும் ஏஐ உடன் பயனர்கள் மேலும் பலவற்றைச் செய்யவும், வேகமாக உருவாக்கவும், சிறப்பாக இணைக்கவும் அதிகாரம் அளிக்கிறது.

ஹெச்பி இந்தியாவின், பெர்சனல் சிஸ்டம்ஸ் பிரிவின் மூத்த இயக்குனர், வினீத் கெஹானி அவர்கள் "இந்தியா ஒரு பன்முகத்தன்மை கொண்ட மற்றும் துடிப்பான சந்தையாகும், அங்கு மக்கள் சக்திவாய்ந்த மற்றும் அணுகக்கூடிய தொழில்நுட்பத்தைத் தேடுகிறார்கள். ஹெச்பியின் அடுத்த தலைமுறை ஏஐ பிசிகளின் பரந்த போர்ட்ஃபோலியோவுடன், அடுத்த பெரிய யோசனையை உருவாக்கும் ஒரு தொடக்க நிறுவனர், அல்லது டிஜிட்டல் மாற்றத்தை வழிநடத்தும் ஒரு பெரிய நிறுவனம் அல்லது பயணத்தின் போது மிடியோக்களைத் திருத்தும் ஒரு படைப்பாளர் என அனைவருக்கும் ஏதாவது ஒன்றை நாங்கள் வழங்குகிறோம்.

இந்த ஏஐ மடிக்கணினிகள் செயல்திறன், பாதுகாப்பு மற்றும் தனியுரிமை அம்சங்கள் மற்றும் பேட்டரி ஆயுளை கணிசமாக மேம்படுத்துகின்றன - இவை அனைத்தும் இந்திய நுகர்வோர் மற்றும் வணிகங்களுக்கு ஒரே மாதிரியாக வேலை செய்யும் பல விலை புள்ளிகளில் உள்ளன.

கூஐ கம்ப்யூட்டிங்கின் எதிர்காலத்தை இந்தியாவிற்கு மிகவும் உள்ளடக் கியதாகவும் பொருத்த மானதாகவும் மாற்றுவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்" என்று கூறினார்.

இந்த அடுத்த தலைமுறை ஏஐ பிசி-களைப் பூர்த்தி செய்ய ஹெச்பி சக்திவாய்ந்த ஏஐ மென் பொருள் அனுபவங்களை வழங்குகிறது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# மாம்பலம் பகுதியில் ஆட்டோ ஓட்டுநரிடம் பணம் மற்றும் ஆட்டோவை பறித்துச்சென்ற நபர் கைது. ரொக்கம் ரூ.2,700/- மற்றும் ஆட்டோ மீட்பு.

சென்னை 25, ஏப்ரல் 2025: சென்னை, மேற்கு மாம்பலம், ஜோதி ராமலிங்கம் தெருவில் வசித்து வரும் கணேஷ்குமார், வ/40, த/பெ.சங்கரபாண்டியன் என்பவர் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறார். இவர் 23.04.2025 அன்று தி.நகர், ஜெயின்கல்லூரி அருகே ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த அறிமுகமான பால முருகன் என்பவர் மேற்படி கணேஷ் குமாரை வழிமறித்து



அவதூறாக பேசி, கையால் தாக்கி அவரிட மிருந்து ரூ.2,700/-, பறித்துள்ளார். மேலும் கணேஷ்குமாரை ஆட்டோவிலிருந்து கீழே தள்ளிவிட்டு, ஆட்டோவை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

இது குறித்து கணேஷ்குமார் ஆர்-1 மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற் கொண்டனர்.

ஆர்-1 மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழிப்பறி வழக்கில்சம்பந்தப்பட்ட பாலமுருகன், வ/38, த/பெ.சுந்தர், பாரதியார் தெரு, வள்ளலார் நகர், கூடுவாஞ்சேரி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிட மிருந்து ரொக்கம் ரூ.2,700/- மற்றும் 1 ஆட்டோ மீட்கப் பட்டது. கைது செய்யப் பட்ட எதிரி பாலமுருகன் விசாரணைக்குப் பின்னர் 23.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதின்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஆதம்பாக்கம் பகுதியில் வீட்டை வாடகைக்கு எடுத்து பாலியல் தொழில் நடத்திய நபர் கைது. பெண் மீட்பு.

சென்னை 25, ஏப்ரல் 2025: சென்னை பெருநகர காவல், விபச்சார தடுப்புப் பிரிவு-2 (இம்மாரல் டிராபிக் ப்ரிவென்சன் யூனிட்-2) காவல் ஆய்வாளர் தலைமை யிலான தனிப்படை யினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் கடந்த 23.04.2025 அன்று மதியம், ஆதம்பாக்கம், வி.வி.காலனி தெருவில் உள்ள ஒரு வீட்டை ரகசியமாக கண்காணித்தபோது, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்தியது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில், பெண் காவலர்கள் உள்ளிட்ட தனிப்படையினர் மேற்படி வீட்டில் சோதனைகள் மேற்கொண்டு, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்திய எதிரி சம்சுதீன், வ/56,த/பெ.முகமதுஅலி, மலப்புரம், கேரள மாநிலம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், மேற்படி இடத்தில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்து வதற்கு தங்க வைத்திருந்த 1 பெண் மீட்கப்பட்டார்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சம்சுதீன் மேற்படி வீட்டை வாடகைக்கு எடுத்து பாலியல் தொழில் நடத்தியதும், இவர் மீது ஏற்கனவே பாலியல் தொழில் நடத்திய குற்றத்திற்காக 2 வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி சம்சுதீன் விசாரணைக்குப் பின்னர் 23.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப் பட்டார். மீட்கப்பட்ட பெண் அரசு மகளிர் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

# முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மயோனைஸ் விற்பனைக்கு தமிழகத்தில் ஓராண்டு தடை: அரசு உத்தரவு

சென்னை 25, ஏப்ரல் 2025: முட்டை யிலிருந்து தயாரிக்கப் படும் மயோனைஸ் விற்பனைக்கு ஓராண்டு தடை விதித்து தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது. இது தொடர்பான உத்தரவு தமிழக அரசு அரசி தழில் வெளியிடப் பட்டுள்ளது.

மயோனைஸ் என்பது வறுத்த கறி, பொரித்த சிப்ஸ்கள், பிரெஞ்ச் பிரைஸ் உள்ளிட்டவைகளை தொட்டு சாப்பிடு வதற்கு பயன்படுத்தப் படுகிறது. இது வெள்ளை நிறத்தில் ஐஸ்கிரீம் போல் இருக்கும். இது இனிப்பு மற்றும் உப்பு சுவை கலந்தாற் போல் இருக்கும். துரித உணவுகள் மற்றும் நொறுக்குத் தீனிகளை அதிகம் சாப்பிடு பவர்கள் எல்ல உணவுடனும் மயோனைஸ் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஆனால் அதில் உள்ள பாக்டீரியாக்கள் உயிரிழப்புக்கு கூட வழிவகுக்கலாம். இது பல கடுமையான உடல்நலப் பிரச்சினை களுக்கு வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து தமிழக அரசு மயோனைஸ் விற்பனைக்கு ஓராண்டு தடை விதித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு கூறியிருப் பதாவது:

மயோனைஸ் தெரு உணவு வகைகள் மற்றும் ஷவர்மா மற்றும் வறுக்கப்பட்ட மற்றும் தந்தூரி போன்ற அசைவ உணவுகள் போன்றவற்றில் ஒரு முக்கிய சேர்க்கையாக மாறியுள்ளது. முட்டைகளால் செய்யப்பட்ட மயோனைஸ் உணவு, அதை உட்கொள் வோருக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்து கிறது. எனவே உடனடியாக முட்டை அடிப்படையிலான மயோனைஸின் பயன்பாடு, விற்பனை அல்லது விநியோகத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். மீறுபவர்கள் அபராதம், உரிமம் ரத்து செய்தல் அல்லது சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை உள்ளிட்ட கடுமையான தண்டனைகளை எதிர்கொள்வார்கள். மயோனைஸ் சார்ந்த பொருட்களை வாங்கும் போது நுகர்வோர் எச்சரிக்கையுடன் செயல்படவும், பொருட்களை சரிபார்க்கவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 8 ஆம் தேதியிலிருந்து மயோனைஸ் விற்பனை, சேமித்து வைப்பது, தயார் செய்வது உள்ளிட்டவைகளுக்கு தடை விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# செகந்திராபாத் - ராமநாதபுரம் விரைவு ரெயில் ராமேசுவரம் வரை நீட்டிப்பு

சென்னை 25, ஏப்ரல் 2025: செகந்திராபாத் - ராமநாதபுரம் விரைவு ரயில் ராமேசுவரம் வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. இது குறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்ப தாவது:

செகந்திராபாத்தில் இருந்து ராமநாத புரத்துக்கு வாராந்திர சிறப்பு ரயில் (எண்: 07695) இயக்கப் படுகிறது. பாம்பன் புதிய பாலம் பயன்பாட்டுக்கு வந்த நிலையில், இந்த ரயில் சேவை புதன்கிழமை முதல் ராமேசுவரம் வரை நீட்டிக்கப் பட்டது. புதன்கிழமை தோறும் செகந்திரா பாத்தில் இருந்து புறப்படும் ரயில் காரைக்குடிக்கு வியாழக்கிழமை இரவு 8.30-க்கு சென்றடையும். தொடர்ந்து சிவகங்கை (இரவு 9.13),



மானாமதுரை (இரவு 9.40), ராமநாதபுரம் (இரவு 10.28) வழியாக ராமேசுவரத்துக்கு நள்ளிரவு 12.15-க்கு சென்றடையும். மறுமார்க்கமாக ராமேசுவரத்தில் இருந்து வெள்ளிக்கிழமை காலை 9.10-க்கு புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் நடைபெற இருக்கின்ற இரகசிய வாக்கெடுப்பில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை எண்.6-இல் வாக்களித்துத் தனிப்பெரும் சங்கமாக உருவாக்கித் தர வேண்டும். - கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள்.

சென்னை 25, ஏப்ரல் 2025: என்.எல்.சி. உடன்பிறப்புகளே!

நிறுவனத்தில் பணியாற்றும் எனது அன்பு அருமை தோழர்களே! இனிய நண்பர்களே! அனைவருக்கும் உங்களில் ஒருவன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அன்பு வணக்கங்கள்.

நான்கு ஆண்டு களுக்கு ஒரு முறை என்.எல்.சி. பொதுத் துறை நிறுவனத்தில் நடைபெறுகின்ற சங்க அங்கீகாரத்திற்கான இரகசிய வாக்கெடுப்புத் தேர்தல் நாளை நடைபெற உள்ளது!

ஒன்றிய அரசுகள் என்.எல்.சி. பங்குகளை விற்றுத் தனியார் மயத்தைப் புகுத்த முயற்சித்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக அது தடுக்கப்பட்டு இன்றளவும் இந்தியா விலேயே அதிக ஊதியம் பெறக்கூடிய தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய பொதுத்துறை நிறுவனமாக என்.எல்.சி. நிறுவனம் விளங்குகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்!

கடந்த தேர்தல்களில் பெரும்பான்மையான தொழிலாளர்களின் வாக்குகளோடு நமது தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் முதன்மைச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல்வேறு நலப் பணிகளைச் சிறப்பாக ஆற்றி உள்ளதை நீங்கள் அறிவீர்கள்!

குறிப்பாக கொரோனாவால் உயிரிழந்த குடும்பங்களின் 124 வாரிசுகளுக்கு வேலை பெற்றுக் கொடுத் திருக்கிறோம்! குப்பந்த தொழி லாளர்களாகப் பணியாற்றிய 3154 தொழிலாளர்களை சொசைட்டி தொழி லாளர்களாகவும், சொசைட்டி தொழி லாளர்களாக இருந்த 2173 தோழர்களை நிரந்தரத் தொழி லாளர்களாகவும், டிப்ளமோ மைனிங் முடித்த 180 இளைய தோழர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்ய வைத்திருக்கிறோம்.

உலகம் முழுவதும் நிரந்தரப் பணியாளர் களை ஒப்பந்த தொழி லாளர்களாக மாற்றுகிற தருணத்தில் தொழி லாளர் முன்னேற்றச் சங்கத்தின் தொடர் முயற்சியின் ஆயிரம் மாகப் பல்லாயிரக்கணக்கான ஒப்பந்த தொழி லாளர்களை நிரந்தரமாக்கிய சாதனைகளைப் படைத்ததுதான் தொழி லாளர் முன்னேற்றச் சங்கம்.

தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு மற்றும் நிலம் கொடுத்த வர்களுக்கு வேலை, சிறந்த பதவி உயர்வு வாய்ப்புகள், பாதுகாப்பான பணிச் சூழல் இவற்றை உறுதி செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் நம்முடைய தொழி லாளர் முன்னேற்றச் சங்கத்திற்கு உண்டு!

எனவே 2027-இல் நடைபெற இருக்கின்ற ஊதியமாற்று ஒப்பந் தத்தில் மேற்கண்ட முக்கியக் கோரிக் கைகளை வென்றெடுக்கத் தொழி லாளர் முன்னேற்றச் சங்கம் இந்த இரகசிய வாக்கெடுப்பில் தனிப்பெரும் சங்கமாக வர வேண்டியது காலத்தின் கட்டாயம்!

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" - என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கமும் ஆற்றி இருக்கக்கூடிய எண்ணில் அடங்கா நலப் பணிகளைக் கருத்தில் கொண்டு 25.04.2025 அன்று நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் நடைபெற இருக்கின்ற இரகசிய வாக் கெடுப்பில் தொழி லாளர் முன்னேற்றச் சங்கத்தை எண்.6-இல் வாக்களித்துத் தனிப்பெரும் சங்கமாக உருவாக்கித் தர வேண்டும் என்று உங்களில் ஒருவனான நான் உங்கள் அனை வரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி, வணக்கம்!

# சர்ச்சை பேச்சு; அமைச்சர் பொன்முடியை பதவியில் இருந்து நீக்கக்கோரி வழக்கு: அரசு பதில் அளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை 25, ஏப்ரல் 2025: சைவம் மற்றும் வைணவம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசிய அமைச்சர் பொன் முடியை பதவி நீக்கம் செய்ய கோரிய வழக்கில் முதல்-அமைச்சர் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளை நீக்கும்படி மனுதாரருக்கு உத்தரவிட்ட சென்னை ஐகோர்ட்டு வழக்கு தொடர்பாக பதில் அளிக்க அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

பெரியார் திராவிட கழகம் சார்பில் 8-ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அமைச்சர் பொன்முடி, சைவம் மற்றும் வைணவம் குறித்தும், பெண்கள் குறித்தும் சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்து இருந்தார். இதற்கு பல தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், கட்சி பொறுப்பில் இருந்து பொன்முடி நீக்கம் செய்யப் பட்டார்.

இதற்கிடையே, பொன்முடியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கக்கோரி வழக்கறிஞர் பி.ஜெகன் நாத் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அதில், மக்கள் பிரதிநிதி என்ற முறையில், அமைச்சர் பொன்முடியின் பேச்சு, அரசியல் சாசனத்திற்கு எதிரானது. பொன்முடியின் பேச்சு, கருத்து சுதந்திரத்தின் கீழ் வராது, குறிப்பிட்ட மதத்தை பற்றி அவதூறாக பேசுவது கருத்து சுதந்திரம் அல்ல. மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் அனைத்து மக்களையும் பாதுகாக்கும் பொறுப்பு அமைச்சர் பொன்முடிக்கு உள்ளது. அமைச்சர் பொன்முடி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் அளித்தும், காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதவி பிரமாணத்தின்போது எடுத்த உறுதிமொழியை மீறி செயல்பட்ட அமைச்சர் பொன்முடியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி ஸ்ரீராம் மற்றும் நீதிபதி முகமது சபீக் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, அட்வகேட் ஜெனரல் ஆஜராகி, இந்த வழக்கு தொடர்பாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் மனுவில், வழக்குக்கு தொடர்பில்லாத முதலமைச்சர் குறித்து அவதூறு கருத்துக்களை தெரிவித் துள்ளார். அவற்றை நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதை மனுதாரர் ஜெகன்நாத் ஏற்றுக் கொண்டதை அடுத்து, அரசு தலைமை வழக் கறிஞர் சுட்டிக்காட்டிய பகுதிகளை நீக்கும்படி மனுதாரருக்கு உத்தர விட்ட நீதிபதிகள், வழக்கு தொடர்பாக பதில் அளிக்கும்படி தமிழக அரசுக்கு உத்தர விட்டு விசாரணையை ஜூன் 19-ந் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# சென்னையில் நாளை தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்: 8ம் வகுப்பு படித்தவர்கள் முதல் பட்டதாரிகள் வரை பங்கேற்கலாம். கட்டணம் இல்லை: கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தகவல்

சென்னை 25, ஏப்ரல் 2025: வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங் களும் இணைந்து நாளை (25 ந் தேதி) தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது சென்னை கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார். இதுகுறித்து கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்டுள்ள அறிக் கையில் கூறியிருப்ப தாவது: இந்த வேலை வாய்ப்பு முகாம் சென்னை - கிண்டி, ஆலந்தூர் சாலையில் உள்ள ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறிவழிகாட் டும் மையத்தில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் 8 ம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ, பொறியியல், கலை, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பிரிவில் ஏதாவது ஒரு பட்டம் (டிகிரி), ஆகிய கல்வித்தகுதியை உடைய அனைவரும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் 20-க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு பணிக்காலியிடங் களுக்கு ஆட்களை தேர்வு செய்ய உள்ளனர். இம்முகாம் வாயிலாக பணி நியமனம் பெறும் இளைஞர்களின் வேலை வாய்ப்பு பதிவு ரத்து செய்யப்பட மாட் டாது. வேலையளிக்கும் நிறுவனங்களும், வேலைதேடும் இளைஞர்களும் இம் முகாமில் கலந்து கொள்ள எந்தவித கட்டணமும் செலுத்த தேவை இல்லை. இம்முகாமில் கலந்து கொள்ளும் வேலை நாடுநர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள்த ங்கள் விவரங்களை தமிழ்நாடு தனியார் துறை வேலைவாய்ப்பு இணையதளத்தில் (www.tnprivatejobs.tn.gov.in) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இவ் வாய்ப்பினை பயன் படுத்திக் கொள்ள லாம். இவ்வாறு கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# தண்டையார்பேட்டை மற்றும் அண்ணா நகர் காவல் நிலைய கொலை வழக்குகளில் குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்று தர சீரிய பணியாற்றிய காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.



சென்னை 25, ஏப்ரல் 2025: 2011ம் ஆண்டு தண்டையார்பேட்டை காவல் நிலைய கொலை வழக்கில் 4 குற்றவாளிக்கு ஆயுள் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.1,25,000/- அபராதம் விபீத்து நீதிமன்றம் தீர்ப்பு.

16.11.2011 அன்று, சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, சஞ்சிவராயன் கோயில் தெருவைச் சேர்ந்த கருணா (எ) கருணாகரன், வ/35, த/பெ.நீலமேகம் என்பவரை சிலர் கத்தியால் தாக்கி கொலை செய்தது தொடர்பாக ஹெச்-3 தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, எதிரிகள் 1.வெங்கட்டா (எ) வெங்கடேசன், த/பெ.மாசிலாமணி வள்ளுவன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, 2.சந்திரசேகர், வ/49/2024, த/பெ.பொன்ராஜ், சஞ்சீவராயன் கோயில் தெரு, கோடம்பாக்கம், 3.அசோக்குமார், வ/48/2024, த/பெ.முருகேசன், டிஃபன்ஸ் லேன், வியாசர்பாடி, சென்னை, 4.ராதாகிருஷ்ணன், வ/38/2024, த/பெ.ராமானுஜம், ராணி அண்ணாநகர், அரும்பாக்கம், 5.பாபு, வ/45/2024, த/பெ.சதாசிவம், எம்.எஸ்.பி.நகர், சென்னை, ஆகிய 5 நபர்களை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவ்வழக்கு தொடர்பாக, உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள 2வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், அப்போதைய ஹெச்-3 தண்டையார்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் திரு.ரமேஷ்பாபு (தற்போது உதவி ஆணையாளர், போக்குவரத்து புலனாய்வு பிரிவு) தலைமையில் உதவி ஆய்வாளர் திரு.பாலசுப்ரமணியன், தலைமை காவலர் திருமதி.விமலா (பெ.த.கா.27779) ஆகியோரால் முறையாக விசாரிக்கப்பட்டு, சாட்சிகளை ஆஜர்படுத்தி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகளில்வெங்கட்டா (எ) வெங்கடேசன் என்பவர் இறந்துவிட்டதால், மற்ற 4 குற்றவாளிகள் சந்திரசேகர், அசோக்குமார், ராதாகிருஷ்ணன், பாபு ஆகியோர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு, 4 எதிரிகளுக்கும் ஆயுள் சிறைதண்டனை மற்றும் தலா ரூ.1,25,000/- அபராதமும் விதித்து, கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார். 2019ம் ஆண்டு அண்ணாநகர் காவல் நிலைய கொலை வழக்கில் 3 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.2,000/- அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு. 02.01.2019 அன்று, சென்னை, அண்ணா நகர் கிழக்கு, அன்னை சத்யா நகர், 2வது மெயின் ரோட்டில் வசித்து வந்த சந்தானம், வ/36, த/பெ.பார்த்தசாரதி என்பவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கே-4 அண்ணா நகர் காவல் நிலையத்தில், கொலை, கூட்டு சதி உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, எதிரிகள் 1.ஜோசப், வ/18, த/பெ.எட்வின், அன்னை சத்யா நகர் 1வது தெரு, அண்ணா நகர் கிழக்கு, 2.சதிஷ், வ/25, தெ/பெ.ரவிச்சந்திரன், அன்னை சத்யா நகர், 3.ராபர்ட், வ/21, த/பெ.எட்வின், அன்னை சத்யா நகர், 4.விமல்ராஜா, வ/19, த/பெ.திவாகர், கே பிளாக், அண்ணா நகர் ஆகிய 4 நபர்களை கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 17 வயதுடைய 3 இளஞ்சிறார்களிடம் விசாரணை செய்து, சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர் செய்து, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

இவ்வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட 4 எதிரிகள் மீது 19வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்திலும், 3 இளஞ்சிறார்கள் மீது போக்சோ வழக்கு சிறப்பு நீதிமன்றத்திலும் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

கே-4 அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.சரவணன் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை சிங்காரவேலர் மாளிகை வளாகத்தில் உள்ள 19வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு விசாரணை நடைபெற்று, நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து 22.04.2025 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகளில் எதிரி ராபர்ட் சமீபத்தில் இறந்துவிட்டதால், மற்ற 3 எதிரிகள் ஜோசப், சதிஷ் மற்றும் விமல்ராஜா ஆகியோர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு, 3 குற்றவாளிகளுக்கும் ஆயுள் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.2,000/- அபராதமும் விதித்து, அபராதம் செலுத்த தவறினால் மேலும் 6 மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார்.

மேற்படி 2 கொலை வழக்குகளிலும் குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை கிடைக்க சீரிய பணியாற்றிய தற்போதைய உதவி ஆணையாளர் திரு.ரமேஷ்,பாபு, உதவி ஆய்வாளர் திரு.பால சுப்ரமணியன், பெண் தலைமைக் காவலர் திருமதி. விமலா, கே-4 அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.சரவணன் ஆகியோரை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் 24.04.2025 அன்று நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.

# மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் புதிய ஊக்கத் தொகை திட்டம் நாட்டில் நிலத்தடி நிலக்கரி சுரங்கத்திற்கு உத்வேகம் அளிக்க வகை செய்கிறது

சென்னை 25, ஏப்ரல் 2025: இந்தியாவின் நிலக்கரித் துறைக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக மத்திய நிலக்கரி அமைச்சகம் அதன் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இது போன்ற சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் அதிக மூலதன முதலீடு, நீண்ட கால சவால்களை எதிர்கொள்வது, நீடித்த வளர்ச்சி ஆகியவற்றுக்கு உத்வேகம் அளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலக்கரி சுரங்கத்தின் மேம்பாடு மற்றும் செயல்பாட்டை விரைவு படுத்த, மத்திய நிலக்கரி அமைச்சகம் ஊக்கத் தொகைத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

இதன்படி, நிலக்கரி சுரங்கங்களுக்கான வருவாய் பங்கீடு 4 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வருவாய் குறைப்பு கணிசமான நிதி நிவாரணத்திற்கு வகை செய்வதுடன் திட்டங்களின் நிதி சார்ந்த நம்பகத் தன்மையையும் மேம்படுத்துகிறது.

நிலக்கரி சுரங்க முயற்சிகளுக்கான கட்டாய முன்கூட்டிய கட்டணத் தேவை முற்றிலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை குறிப்பிடத்தக்க நிதிசார்ந்த தடைகளை நீக்குகிறது. நிலக்கரி உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிப்பதுடன் அதன் விரிவான திட்ட அமலாக்கத்தையும் எளிதாக்குகிறது.

இந்த ஊக்கத் தொகை தொகுப்பானது நிலக்கரி உற்பத்திக்கான செயல்திறனைப் பாதுகாக்கிறது. நிலத்தடி நிலக்கரி தொகுப்புக்கான செயல்திறன் பாதுகாப்புக்கு தற்போதுள்ள 50% தள்ளுபடி திட்டத்தை தடையில்லாமல் பூர்த்தி செய்ய உதவும்.

# 78-வது நிறுவன தினத்தை சிறப்பு விருந்தினர்கள் மற்றும் முக்கிய ஒத்துழைப்புகளுடன் கொண்டாடியது, சிஎஸ்ஐஆர்-சிஎல்ஆர்ஐ



சென்னை 25, ஏப்ரல் 2025: சிஎஸ்ஐஆர்-மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (சிஎஸ்ஐஆர்-சிஎல்ஆர்ஐ), சென்னை, அதன் 78 வது நிறுவன தினத்தை ஏப்ரல் 24, 2025 அன்று கொண்டாடியது. சி.எஸ்.ஐ.ஆர்-சி.எல்.ஆர்.ஐ.யின் இயக்குநர் டாக்டர் கே.ஜே.ஸ்ரீராம் வரவேற்புரை நிகழ்த்தினார். தோல் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் நிறுவனத்தின் முக்கிய பங்களிப்பை எடுத்துரைத்தார்.

தோல் ஏற்றுமதி கவுன்சிலின் நிர்வாக இயக்குநர் திரு.ஆர்.செல்வம், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று நிறுவன நாள் சொற்பொழிவை நிகழ்த்தினார். சர்வதேச சந்தைகளுக்கு இந்திய தோல் தயாரிப்புகளை பிராண்டிங் செய்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டிய அவர், நிறுவனத்தின் ஆராய்ச்சி உள்கட்டமைப்பை முழுமையாகப் பயன்படுத்த இளம் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்தார். தோல் தொழிலின் வளர்ந்து வரும் இயக்கவியல் பற்றிய நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்ட திரு செல்வம், நிலைத்தன்மை, புதுமை மற்றும் சிஎஸ்ஐஆர்-சிஎல்ஆர்ஐ-இன் முக்கிய பங்கு ஆகியவற்றை வலியுறுத்தினார்.

கோலாப்பூர் காலணி தொகுப்பை மேம்படுத்துவதற்காக சிஎஸ்ஐஆர்-சிஎல்ஆர்ஐ மற்றும் கலபுரி அறக்கட்டளை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது இந்த நிகழ்வின் முக்கிய சிறப்பம்சமாகும்.

இந்த கூட்டாண்மையின் கீழ், சிஎஸ்ஐஆர்-சிஎல்ஆர்ஐ தொகுப்புக்குள் நிலைத்தன்மை, திறன் மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான விரிவான ஆய்வை மேற்கொள்ளும், அதே நேரத்தில் தேசிய மற்றும் சர்வதேச தளங்களில் பாரம்பரிய காலணிகளை ஊக்குவிக்கும்.

இந்த கொண்டாட்டங்களில் ரசாயன, உயிரியல் மற்றும் பொறியியல் அறிவியல் துறைகளில் இளம் ஆராய்ச்சியாளர் போட்டியும் இடம் பெற்றது, வெற்றியாளர்கள் நினைவுப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களுடன் கௌரவிக்கப்பட்டனர்.

கூடுதலாக, 2024-25 ஆம் ஆண்டில் பன்னிரண்டு காப்புரிமைகளை தாக்கல் செய்த மற்றும் ஆறு பதிப்புரிமைகளைப் பதிவு செய்த கண்டுபிடிப்பாளர்கள் பாராட்டுச் சான்றிதழ்களுடன் அங்கீகரிக்கப்பட்டனர்.

# டிஜிலாக்கர் செயலி மூலம் விளையாட்டுச் சான்றிதழ்களை வழங்கும் திட்டத்தை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தொடங்கி வைத்தார்




சென்னை 25, ஏப்ரல் 2025: தில்லியில் உள்ள இந்திரா காந்தி மைதானத்தில் டிஜிலாக்கர் செயலி மூலம் விளையாட்டு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்ச்சியை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று தொடங்கி வைத்தார்.

முன்னதாக, அவர் தேசிய விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையத்தையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய டாக்டர் மாண்டவியா, விளையாட்டு வீரர்களின் நலனில் மத்திய அரசின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்டு வரும் அனைத்து விளையாட்டு முன்முயற்சிகளும் விளையாட்டு வீரர்களை மையமாகக் கொண்டவை என்று கூறினார். வரைவு தேசிய விளையாட்டு ஆளுமை மசோதா 2024, வரைவு தேசிய விளையாட்டுக் கொள்கை 2024 மற்றும் விளையாட்டில் வயது மோசடிக்கு எதிரான தேசிய சட்ட வரைவு 2025 ஆகியவற்றின் உதாரணங்களை அவர் மேற்கோள் காட்டினார். இவை இந்தியாவில் விளையாட்டுக்கான சூழல் அமைப்பில் வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் சிறந்த ஆளுமையை உறுதி செய்யும் என்று கூறினார்.

டிஜிலாக்கர் செயலி மூலம் வழங்கப்படும் விளையாட்டு சான்றிதழ்கள் விரைவில் தேசிய விளையாட்டு களஞ்சிய அமைப்புடன் ஒருங்கிணைக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். இது மத்திய அரசின் ரொக்கமாக வழங்கப்படும் பரிசுகளை நேரடியாக விளையாட்டு வீரர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்க உதவுகிறது. இதன் மூலம் காகிதப் பயன்பாடு முற்றிலும் தவிர்க்கப்படும்.

"கடந்த காலங்களில் விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பதக்கம் வென்ற பிறகு அரசின் ரொக்கப் பரிசுகளை பெற விண்ணப்பிக்க வேண்டிய நிலை இருந்து வந்து. விளையாட்டு வீரர்கள் தங்களது வெகுமதியைப் பெறுவதில் சிக்கல்கள் அல்லது தடைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. எனவே, இதனை நீக்கும் வகையில், உருவாக்கப்பட்டுள்ள இந்தச் செயலி சர்வதேச அளவில் பதக்கம் வெல்லும் ஒவ்வொரு விளையாட்டு வீரரும் தங்களுக்கான பரிசுகளை எவ்வித சிரமமுமின்றி பெறுவதற்கு வழிவகுக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டங்கள் குறித்து விவரித்த டாக்டர் மாண்டவியா, 2036-ம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான மத்திய அரசின் முயற்சிகள் குறித்து எடுத்துரைத்தார்.

2030-ம் ஆண்டில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதில் இந்தியா ஆர்வம் கொண்டிருப் பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ராய்ப்பூரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் முதலாவது ஸ்வாப் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது



சென்னை 25, ஏப்ரல் 2025: மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ், எய்ம்ஸ் ராய்ப்பூர் தனது முதலாவது ஸ்வாப் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டது. இது சிறுநீரக இணை மாற்று அறுவை சிகிச்சை என்று அழைக்கப்படுகிறது. இந்த சாதனையானது, புதிதாக அமைக்கப் பட்டுள்ள எய்ம்ஸ் மருத்துவமனைகளில் முதலாவதாகவும் இந்த சிக்கலான மற்றும் உயிர் காக்கும் அறுவை சிகிச்சையை மேற்கொண்ட சத்தீஸ்கரின் முதல் அரசு மருத்துவமனையாகவும் அமைந்துள்ளது. சிறுநீரக நோயால் பாதிக்கப் பட்டுள்ள நோயாளிகளுக்கு சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்துவதற்கும் புதுமையான சிகிச்சை முறைகளுடன் நோய்க்கான தீர்வுகளை வழங்குவதற்கும் இந்த அறுவை சிகிச்சை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டதன் மூலம் இது போன்ற உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 15% அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று எதிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து தேசிய திசு மாற்று அமைப்பு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவும் என்று தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மிகவும் திறம்பட மேற்கொள்ளும் வகையில் ஒரு நாடு ஒரே மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தை செயல்படுத்தவும் இந்த அமைப்பு முடிவு செய்துள்ளது.